2018 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட, நாகிரெட்டிப்பட்டி, பொம்மம்பட்டி மற்றும் வேள்விக்குடி ஆகிய இடங்களில் அரசாணை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2008–ன்படி, கால்நடை கிளை நிலையங்கள் ரூபாய் 8 இலட்சத்து 96 ஆயிரம் செலவில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கால்நடை கிளை நிலையங்களை, துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் அங்கேயும் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

199—

முந்திரி மற்றும் பலா தொழிற்பேட்டை

***13039—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சியில் முந்திரி மற்றும் பலா தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சியில் முந்திரி மற்றும் பலா தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் முந்திரியும், 8 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பலாவும் பயிரிடப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதிலும் குறிப்பாக நெய்வேலி தொகுதி, பண்ருட்டி பகுதியில்தான் அதிகமாக 16 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்படுகிறது. அதிலே பழைய முறையைப் பயன்படுத்தியும், அதேபோல புதிய modern technology–ஐ பயன்படுத்தியும் முந்திரி பதப்படுத்தும் தொழில் செய்யப்படுகிறது. அதனால் அந்நியச் செலாவணி பெருமளவில் நமக்குக் கிடைக்கிறது. விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகின்ற நேரத்தில், பெண்களுக்கு Processing Unit, பதப்படுத்தும் தொழில் பிரிவில் அதிகமாக வேலைவாய்ப்புக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அதேபோல பலாவைப் பொறுத்தவரை பலாப்பழத்திலிருந்து 20–க்கும் மேற்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்க முடியும். பலாப்பழத்தினுடைய மதிப்பைக் கூட்டுகின்ற வகையில் chips–ல் ஆரம்பித்து, இனிப்பு வகைகள் வரை தயாரிக்கின்ற தொழில்நுட்பத்தை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தால், அதனுடைய மதிப்புக் கூட்டப்பட்டு, ஒரு பலாப்பழம் 200 ரூபாய் என்று விற்பனை செய்யப்படுவது 5 மடங்கு முதல் பத்து மடங்கு வரை அதிகரிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டு, முடியுங்கள். பலாப்பழம் இனிப்பாகத்தான் இருக்கும். கேள்வியைக் கேட்டு, முடியுங்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பலாப்பழத்தின் விலை கூடும். எனவே, நான் கேட்டிருக்கின்ற கீழக்குப்பம் ஊராட்சிப் பகுதியில். . .

2018 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்டு, முடியுங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வியைக் கேட்டுவிடுகிறேன். 45 ஏக்கர். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்டு, முடியுங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பலாப்பழத்தின் விலை கூடும். எனவே, நான் கேட்டிருக்கின்ற கீழக்குப்பம் ஊராட்சிப் பகுதியில் 45 ஏக்கர் அரசு நிலம் இருக்கிறது. அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைத்தால் விவசாயிகளுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். அதேபோல இளைஞர்களுக்கும், தொழில்முனைவோர்களுக்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்த இடத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி வட்டத்தில் அமைந்துள்ள கீழக்குப்பம் ஊராட்சியில் 158.570 ஹெக்டேர் நிலப்பரப்பில் முந்திரி பயிரிடப்படுகிறது. அங்கு ஆண்டொன்றுக்கு 150.641 மெட்ரிக் டன் அளவிற்கு முந்திரி உற்பத்தியாகின்றது. கீழக்குப்பம் ஊராட்சியில் 8 குறு, சிறு தொழில் நிறுவனங்கள் முந்திரி பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளன. கடலூர் மாவட்டத்தில், சுமார் 844 குறுந்தொழில் நிறுவனங்களும், 30 சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் முந்திரி பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இந்நிறுவனங்களுக்கு 2,40,000 மெட்ரிக் டன் அளவில் முந்திரி தேவைப்படுகின்றது. எஞ்சிய தேவைக்கு, இந்நிறுவனங்கள் முந்திரிக் கொட்டைகளை இறக்குமதி செய்கின்றன. ஆனால், நெய்வேலி தொகுதியில் உள்ள கீழக்குப்பம் ஊராட்சியில் ஆண்டொன்றுக்கு 150.65 மெட்ரிக் டன் அளவிலான முந்திரி மட்டுமே உற்பத்தியாகின்றது.*

நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சியில் 48.560 ஹெக்டேர் நிலப்பரப்பில் பலா பயிரிடப்படுகிறது. இவற்றிலிருந்து, 16,996 மெட்ரிக் டன் அளவிலான பலா உற்பத்தியாகின்றது.

கடலூர் மாவட்டத்தில் விளையும் பலா இனிப்புச் சுவை கூடுதலாக உள்ள காரணத்தினால், அதனை அனைவரும் சுவைக்கும்வண்ணம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் பலாப்பழங்கள் அனுப்பப்படுகின்றன. மேலும், பலாப்பழக் கூழ் மற்றும் சாறு ஆகியவற்றுக்கு மக்களிடத்தில் அதிகமான வரவேற்பு இல்லை. கடலூர் மாவட்டத்தில் தற்போது அமைந்துள்ள நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களான முந்திரிக் கொட்டை மற்றும் பலாப்பழம் போதுமான அளவில் கிடைக்கப்பெறாததால், நெய்வேலி தொகுதி, கீழக்குப்பம் ஊராட்சியில் அரசுமூலம் முந்திரி மற்றும் பலாவிற்கு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது பெரிய விவசாயிகளுக்கும், பெரிய தொழில் அதிபர்களுக்கும்தான், ஆனால், நான் குறு, சிறு விவசாயிகளுக்குக் கேட்கிறேன். அவர்கள் பயன்பெறும் வகையில், அங்கே இருக்கும் அரசு நிலத்தைக் கையகப்படுத்தி, அதில் அடிப்படை வசதிகளான மும்முனை மின்சாரம், தண்ணீர் வசதி போன்றவற்றைச் செய்து கொடுத்தாலேபோதும். ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிக நிதி தேவைப்படும் என்று நினைக்காமல், குறைந்தபட்ச அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தாலே போதும். அங்கிருக்கிற குறு, சிறு விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது உண்மைதான். முந்திரியைப் பதப்படுத்தும் பெரிய தொழில் அதிபர்கள்தான் முந்திரிக் கொட்டைகளை வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கிறார்கள். ஆனால், அங்கிருக்கிற சிறு விவசாயிகள் விளைவிக்கும் முந்திரிக்கும்,

2018 ஜூன் 14]

பலாப்பழத்திற்கும் சரியான விலை கிடைப்பதில்லை. அவர்கள் பயன்பெறும் வகையில் இந்தத் தொழிற்பேட்டையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றவுடன், நானே தொழில் வல்லுநர்களை வரவழைத்து விவசாயிகளுக்குப் பயிற்சிகூட கொடுத்தேன். எனவே, அதைப்போன்று சிறிய முதலீட்டில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முயற்சிகளை எடுத்தால், அங்குள்ள விவசாயிகளுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்பதால், ஒரு தொழிற்பேட்டையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் சுமார் 13,286.70 ஹெக்டேர் நிலப்பரப்பில் முந்திரி பயிரிடப்படுகிறது. இவற்றிலிருந்து, ஆண்டொன்றுக்கு 12,622.370 மெட்ரிக் டன் அளவில் முந்திரி உற்பத்தி செய்யப்படுகின்றது. அதேபோன்று, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் 458 ஹெக்டேர் நிலப்பரப்பில் பலா பயிரிடப்படுகிறது. இவற்றிலிருந்து ஆண்டொன்றுக்கு 16,030 மெட்ரிக் டன் அளவிலான பலா உற்பத்தியாகின்றது. எனவே, கடலூர் மாவட்டத்தில் தற்போது அமைந்துள்ள நிறுவனங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களான முந்திரிக் கொட்டை மற்றும் பலாப்பழங்கள் கிடைக்கப்பெறவில்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடத்தில் சிறு, குறு தொழிற்சாலையை நிறுவினால், அங்கிருக்கக்கூடிய பெண்கள் மற்றும் சிறிய தொழிலாளர்களுக்கு அது ஏதுவாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பலாப்பழப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக கேள்வி நேரத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ஜெயராமன் அவர்கள் நீரா பானத்தைக் கொண்டுவந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் கொடுத்து, நீரா பானத்திற்கு விளம்பரத்தை தேடி, அதற்கு ஒரு பாராட்டைப் பெற்றுவிட்டார். அதேபோன்று, நம்முடைய அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் பலாப்பழத்தை கொடுக்க வேண்டும். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மானியத்தின்போது ஏதாவது கொடுக்கிறார்கள் அல்லவா? அதுபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர்கள் எல்லோருக்கும் ஒரு பலாப்பழத்தைக் கொடுத்து விடுங்கள். அதன் பிறகு பலாப்பழத்தைப் பற்றி யோசிக்கலாம். முந்திரி தொழிற்சாலை அமைக்கலாமா, வேண்டாமா என்பதைப் பற்றி உறுப்பினர்கள் சொல்வார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பலாப்பழத்தை கொடுத்து விடுங்கள். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பலாப்பழத்தைச் சாப்பிடுவார் என்றால், கண்டிப்பாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பலாப்பழம் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*